DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.259/2023

Deposition of witness for Prosecution – PW–1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரஸ்வதி | Caste | : |
| W/o. | : மணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 16.09.2025.

Accused present.

முதல் விசாரணை :

நான் மேட்டூர் வட்டம் பெரிய சோரகை கிராமம் மாட்டுக்காரன் வளவில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன மணி எனது கணவர் ஆவார். எனக்கு 2 பெண் மற்றும் ஒரு ஆண் வாரிசுகள் ஆவார்கள். நாங்கள் வன்னியர் சமூகத்தை சார்ந்தவர்கள். என் கணவர் லாரி டிரைவராக வேலை செய்து வந்தார். என் கணவருக்கு குடிப்பழக்கம் உள்ளது. ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவ்வப்போது அவர் என் கணவரை தேடி என் வீட்டிற்கு

வருவார். என் கணவர் லாரி டிரைவராக சைக்கிள் ஸ்டாண்ட் குமார் என்பவரிடம் வேலை செய்து வந்தார். அவருடைய வீடு கருக்குப்பட்டியில் உள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சுமார் ஒன்னரை வருடத்திற்கு முன்னர் மார்கழி மாத கடைசியில், தேதி நினைவில்லை ஒரு நாள் என் கணவர் லாரி டிரைவராக வேலை செய்து கொண்டிருந்தபோது காலை 6.00 மணிக்கு என்னிடம் வேலைக்கு செல்வதாக சொல்லிவிட்டு ஓனர் குமார் தன்னை அழைப்பதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றார். பிறகு மதியம் எனக்கு போன் செய்து நான் குமாரின் சைக்கிள் ஸ்டாண்டில் இருப்பதாக என்னிடம் சொன்னார். அதற்கு பின்னிட்டு அவர் என்னிடம் பேசவில்லை. அப்போது என்னுடைய ஊர்க்காரர்கள் எதிரி வேறு ஒரு நபருடன் என் கணவரை நடுவில் உட்கார வைத்துக்கொண்டு ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றதாக என்னிடம் சொன்னார்கள்.

மாலை 5.00 மணிக்கு எனது கணவர் கருக்குப்பட்டியில் உள்ள குமார் என்பவரின் விவசாய கிணற்றில் கழுத்து அறுபட்டு நிலையில் கை, கால்கள் வெட்டி எடுக்கப்பட்ட நிலையில் பிணமாக கிடப்பதாக தகவல் கிடைத்தது. பின்னர் என் உறவினர்களுக்கு தகவல் சொல்லி சம்பவ இடமாக கருக்கப்பட்டியில் உள்ள குமாரின் விவசாய நிலத்திற்கு சென்று பார்த்தேன். அப்போது இரவு 7.00 மணி இருக்கும். உடம்பு, தலை பாகங்கள் தனித்தனியே 6 பாகமாக வெட்டப்பட்டு என் கணவர் பிணமாக கிடந்தார். நான் உறவினர்களுக்கு தகவல் சொன்னதன் பேரில் எனது மருமகன் நாகராஜுடன் தாரமங்கலம் காவல்நிலையத்திற்கு சென்று

புகார் கொடுத்தேன். புகாரை நான் சொல்லச்சொல்ல என் மருமகன் நாகராஜ் எழுதி கொடுக்க நான் அதை அவர் படித்துக்காட்ட அந்த புகாரில் நான் கைரேகை வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் அளித்த புகார்தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும்.

பின்னர் மறுநாள் போலிசார் தீயணைப்பு துறையினரின் உதவியுடன் உடல் பாகங்களை ஒன்றிணைத்து கிணற்றுக்கு அருகே தரையில் வைத்து காலை 8.00 மணிக்கு பிரேத விசாரணை செய்தபோது நான் உடனிருந்தேன்.

எனது கணவருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே செல்போன் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. என் கணவர் எதிரியிடம் ரூ.200/– பெற்றுக்கொண்டு செல்போனுக்கு பதிலாக செல்போன் காலிபெட்டியை கொடுத்ததால் எதிரிக்கு என் கணவர்மேல் முன் விரோதம் இருந்து வந்தது. அதை மனதில் வைத்துக்கொண்டு எதிரி என் கணவரின் கழுத்தை அறுத்து உடலை 6 துண்டுகளாக வெட்டி கொலை செய்து உடல் பாகங்களை கருக்கப்பட்டி குமாரின் கிணற்றில் போட்டுவிட்டார்.

சம்பவத்தின்போது என் கணவர் அணிந்திருந்த உடைகளை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் ரத்தக்கறை உள்ள கத்திரி ப்ளூ கருப்பு வெள்ளை காக்கி கலர் கோடுகள் உள்ள கிழிந்த நிலையில் உள்ள அரைக்கை டீ சர்ட் மற்றும் கருப்பு சிமெண்ட் கலர் கோடுகள் உள்ள ரத்தக்கறை படிந்த லுங்கியை என் கணவர் அணிந்திருந்தார். கருப்பு மஞ்சள் கட்டம் போட்ட துண்டு ஒன்றும் அணிந்திருந்தார். மேற்படி ரத்தக்கறை படிந்த டீ சர்ட் – சா.பொ.1,

ரத்தக்கரை படிந்த லுங்கி சா.பொ.2, துண்டு சா.பொ.3 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.